### தர்மேந்திர பிரதான் பதவி விலகினால் மட்டும் போதுமா?

# ‘நீட்’ தேர்வை ஒழிக்கும்வரை திராவிடர் கழகத்தின் போராட்டம் ஓயாது!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



**சென்னை, ஜூலை 31– ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலகினால் மட்டும் போதுமா? நீட் தேர்வு முற்றிலும் ஒழிக்கப்படவேண்டாமா? மாணவர்கள் போராட்டத்தை மடைமாற்றியது நியாயமா? நீட்டை ஒழிக்கும்வரை திராவிடர் கழகத்தின் போராட்டம் ஓயாது! ஊன்றிப் படித்து – உண்மையை பரப்புங்கள்! என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :–

நீட் தேர்வில் நடந்துவரும் முறைகேடுகள் காரணமாகக் கொதிப்படைந்த மாணவர்கள் அதற்கெதிராகப் பல்வேறு இடங்களிலும் போராடத் தொடங்கினர். டில்லியிலும், பல மாநிலங்களின் நகர்புறங்களிலும் முன்பு எப்போதும் காணாத அளவுக்கு “நீட் தேர்வு முறை ஒழிக்கப்பட வேண்டும்” என்பதையே இலக்காகக் கொண்டு தொடங்கி, நாளும் பெரிதாகி வந்தது – மாணவர்களின் நியாயமான போராட்டம்! இதனையடுத்து, ‘கரப்பான்பூச்சி ஜனதா கட்சி’ என்ற அமைப்பு டில்லியில் ஒரு போராட்டத்தை முன்னெடுத்தது. அதில் ஏராளமாக இளைஞர்களும், மாணவர்களும் பங்கெடுத்தனர். அவர்களுக்கு ஆதரவு தந்த அரசியல் கட்சிகளும், தலைவர்களும் (நாடாளுமன்றத்தையே நடத்த விட முடியாத அளவிற்கு) இப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவது முக்கியம் என்பதை வலியுறுத்தியும், நாளும் பெருகியது. தன்னெழுச்சியாகத் திரண்ட மாணவர், மாணவிகள் மீது, தடியடி, கண்ணீர்ப் புகை, பெல்லட் (சிறு குண்டுகள்) வீச்சு போன்றவற்றால், போராட்டத்தை ஒடுக்க நினைத்தது ஒன்றிய அரசு. ஆனாலும், போராட்டம் தொடர்ந்ததுடன், பல மாணவர்களின் ரத்தம் சிந்திய கோரக் காட்சிகளுக்குக் கண்டனம் தெரிவித்தும், மாணவர்களது நீட் தேர்வு ஒழிப்புக்கு ஆதரவு தெரிவித்தும் நாடெங்கும் விரிவடைந்த அறப் போராட்டத்தின் விளைவாக, ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் தனது பதவியை விட்டு விலகினார் என்ற நிலையில், இதன்மூலம் மாணவர்கள் போராட்டம் வெற்றி பெற்று முழுமை அடைந்து விட்டது என்று கூறி ஆறுதல் கொள்ளவோ அல்லது மகிழ்ந்திடவோ முடியுமா என்றால், பகுத்தறிவுக் கண்ணோட்டத்தோடும், சமூகநீதிக் கண்ணோட்டத்தோடும் இலக்கை மறக்காது, பொது நிலையில் நின்று ஆய்வு செய்தல் மிகவும் அவசியம் – அவசரம்.

**ஒன்றிய அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை!**

நாளும் வலுத்து வந்த ‘நீட்’ தேர்வுக்கு எதிரான போராட்டத்தினைக் கைவிட இரண்டு அமைச்சர்கள், ஜே.பி.நட்டா, ஜிதேந்திர சிங் ஆகியோர் மாணவர் குழுவை பேச்சுவார்த்தைக்கு அழைத்துப் பேசினர். பேச்சுவார்த்தையில் போராட்டக் குழுவின் சார்பில் பங்கெடுத்த கரப்பான் பூச்சி கட்சியின் பிரதிநிதிகள் சவுரவ் தாஸ், அசுதோஷ் ரங்கா மற்றும் இளைஞர் பிரதிநிதிகள் ஆகியோர் வைத்த கோரிக்கைகள், மூன்று என்று செய்திகள் வெளிவந்தன.

நீட் வினாத்தாள் கசிவு மற்றும் குளறுபடிகளுக்குப் பொறுப்பேற்று ஒன்றிய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் தனது பதவியை விட்டு விலக வேண்டும்.

நீட் தேர்வு முறைகேடு காரணமாகவும், மன உளைச்சலாலும் உயிரிழந்த/தற்கொலை செய்துகொண்ட மாணவர்களின் குடும்பங்களுக்குத் தலா ரூ.ஒரு கோடி இழப்பீடு வழங்க வேண்டும்.

டில்லி போராட்டத்தில் பங்கேற்ற மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மீது காவல்துறையினரால் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைகளை (FIR) முழுமையாக ரத்து செய்ய வேண்டும்; மேலும், இப்போராட்டம் தொடர்பாக எதிர்காலத்தில் எந்தவித சட்ட நடவடிக்கையோ அல்லது வழக்கோ தொடரப்படாது என்ற எழுத்துப்பூர்வ உறுதிமொழியை வழங்க வேண்டும்.

இந்த மூன்றில், எதற்காக இந்தப் போராட்டம் வெடித்ததோ அந்த முக்கிய இலக்கான நீட் தேர்வு ரத்து – அகில இந்திய அளவில் தேர்வு நடத்தும் NTA தேர்வு முகமை அமைப்பு கூடாது என்பது எனவும் வற்புறுத்தப் பட்டதாகவே தெரியவில்லை.

”எங்களுக்கு சில நாள்கள் அவகாசம் தாருங்கள் என்று மாணவர் குழுவிடம் ஒன்றிய அமைச்சர்கள் கேட்டுக் கொண்டதாக, சில செய்திகள் தெரிவித்தன.

பிறகு அடுத்த நாளே, கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் தனது பதவியை விட்டுவிலகினார் என்ற செய்தி வந்தது. புறத் தோற்றத்தில் மாணவர் போராட்டத்திற்குக் கிடைத்த ஒரு மாபெரும் வெற்றி என்பதுபோல, உணர்ச்சியால் உந்தப்பட்டு, போராட்டம் நடத்திய மாணவர்களுக்குத் தோன்றினாலும், உண்மையில் இந்த தர்மேந்திர பிரதான் பதவி விலகியதால் – எந்த முக்கிய நோக்கத்திற்காக அவர்கள் போராட்டம் நடத்தி, கண்ணீர்ப்புகை, கஷ்ட நஷ்டங்களைப் பெற்றார்களோ, அது நிறைவேறியுள்ளதா என்றால், அந்தக் கேள்விக்கு அவர்கள் உணர்ச்சிகளை ஒதுக்கி வைத்து அறிவுபூர்வமாகச் சிந்தித்தால், பதில் என்னவாக இருக்கும்?

‘நீட்’ தேர்வு முறை அரசியலமைப்புச் சட்டத்திற்கு முற்றிலும் விரோதமான ஓர் அநியாயம். கூட்டாட்சித் தத்துவத்திற்கே குழிபறித்த திணிப்பு. இதை நாம் பலமுறை விளக்கி யுள்ளோம்.

அரசியலமைப்புச் சட்டத்தின் ஏழாம் அட்டவணையில், அதிகாரப் பகிர்வில் உள்ளபடி மாநிலப் பட்டியலில் உள்ள அதிகாரங்களில் தேர்வு நடத்தும் அதிகாரம், பல்கலைக் கழகங்களின் பறிக்கப்பட முடியாத ஒன்று. அதை அப்பட்டமாக மீறியது ஒன்றிய அரசு.

முதலில் ‘நீட்’டில் ஆரம்பித்து, பல படிப்புகளுக்கு நெக்ஸ்ட், கியூட் என்ற அக்கப்போர் கொடுமைகள் நீளுவதைப் போல, இந்த அகில இந்திய தேர்வு முகமை (NTA) தனக்கு இல்லாத அதிகாரங்களை விரித்து க் கொண்டே போனது.

இதற்குக் காரணம், ‘தகுதி, திறமை, ஊழலை ஒழிப்பது’ என்று தொடக்கத்தில் கூறப்பட்டுதான் இப்படி ஒரு சட்ட விரோத, நியாய விரோத – தேர்வு முகமை, உச்சநீதிமன்றத்தின் ஒத்துழைப்புடன் தொடங்கப் பட்டது!

இதுவரையில் நடைபெற்ற நீட் தேர்வானது ஊழலற்ற முறையில் நடைபெற்றிருக்கிறதா?

அது தொடங்கிய கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலான காலத்தில் எந்த ஒரு தேர்வாவது ஊழலற்ற முறையில் நடைபெற்றது என்று ஆட்சியாளரோ, தேர்வு முகமையோ விரலை மடக்க முடியுமா என்பது ‘நீட்’ தேர்வு எதிர்ப்பாளர்களின் நியாயமான கேள்வி அல்லவா?

மாநிலங்கள் – பல்கலைக்கழகங்களின் தனி உரிமையைப் பறித்து, ஊழல் மயம், கார்ப்பரேட் கனவான்களின் கொள்ளை, பள்ளிகளுக்குப் பதில் கோச்சிங் சென்டர், அவர்களுக்கும் கேள்வித் தாள் தயாரிப்பாளர்களுக்கும் ஏற்பட்ட விசித்திர உறவுகளும் – லஞ்சம் பெற்ற கதைகளும் வழக்குகளாக வந்துள்ள நிலைதானே இன்று யதார்த்தம்!

நீட் தேர்வு சமூக நீதிக்கும், மாநில உரிமைகளுக்கும் ஏழை எளிய மாணவர்களுக்கும், கிராமப்புற மாணவர்களுக்கும் எதிரானது என்பதைத் தொடர்ந்து நாம் எச்சரித்து வருகிறோம். நாடு முழுவதும் மாணவ, மாணவிகளின் தற்கொலைகள் நம்மை ரத்தக் கண்ணீர் வடிக்கச் செய்தன. தமிழ்நாட்டு அனிதாக்கள் தொடங்கி, பல மாநிலங்களிலும் தொடர்கதையாகி வருகிற கொடுமை, நீட் தேர்வு மாநில உரிமைக்கு மட்டுமல்ல, மாணவர்களின் நலத்திற்கும், எதிர்காலத்திற்கும் எதிரானது என்பதை நாளும் நிரூபித்து வருகிறது.

திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும், சமூகநீதியில் அக்கறை கொண்ட தமிழ்நாட்டுக் கட்சிகளும்தான் இதனை முதன்முதலில் அடையாளம் கண்டு, எதிர்த்தன!

‘திராவிட மாடல்’ ஆட்சியில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில், தி.மு.க. ஆட்சியில் நீட் தேர்வின் விளைவுகளைக் குறித்து ஆராய்ந்திட உயர்நீதிமன்ற நீதிபதி (ஓய்வு) டாக்டர் ஏ.கே.ராஜன் தலைமையில் ஒரு குழு அமைத்து, விரிவான அறிக்கை பெற்று, அதையொட்டி இரண்டு முறை மசோதாக்கள் நிறைவேற்றி அனுப்பப்பட்டது. ஆளுநர்கள் மூலமும், உள்துறை அமைச்சகம் மூலமும் அதனைக் கிடப்பில் போட்டும் மற்றும் இறுதியில் முடியாது என்றும் ஒன்றிய அரசால் கூறப்பட்டது.

**இந்தியாவுக்கே, தமிழ்நாடுதான் முதன்முதலில் வழிகாட்டியது!**

தமிழ்நாட்டில் பி.ஜே.பி. தவிர மற்ற அத்தனைக் கட்சிகளும் ‘நீட் தேர்வை’ எதிர்த்த நிலைப்பாடுதான் முதன் முதலில் இந்தியாவுக்கே வழிகாட்டியது. வழமைபோல, பெரியாரின் சமூகநீதிக் கொள்கைகள்தான் இந்தியாவிற்கே வழிகாட்டும் கலங்கரை வெளிச்சம் என்பது இப்போது விளங்காத அறிவு சூன்யங்களுக்கும் விளங்கிடக் கூடும். இந்த நிலையில் மாணவர்களின் டில்லி அறப் போராட்டம் – வெற்றி என்று கூறுவதைவிட, திசை திருப்பப்பட்டு விட்டதா என்ற கவலைதான் நம்மைப் போன்ற தொடக்கம் முதலே இதனைச் சரியான அடையாளம் கண்டவர்களுக்கு ஏற்படுகிறது!

தமிழ்நாட்டில் நுழைவுத் தேர்வை எம்.ஜி.ஆர் ஆட்சி கொண்டு வந்த போதே அதனை எதிர்த்து தொடர்ந்து 21 ஆண்டுகள் போராடி வெற்றி கண்டு, மாநிலங்களின் கல்வி உரிமையைக் காத்த, காத்து வருகின்ற இயக்கங்கள் திராவிடர் கழகமும், தி.மு.க.வும்தான்! இன்றும் இந்த இரட்டைக்குழல்களும் ‘நீட் தேர்வு’ என்ற சூழ்ச்சிப் பொறி மூலம் ஒடுக்கப்பட்ட ஏழை, எளிய மாணவர்கள் டாக்டர்கள் கனவு பறிக்கப்படுவதைத் தடுக்கவும், உயிர்ப் பலிகளைத் தடுக்கவும் களம் கண்டு போராடவும் என்றும் தயாராக இருக்கின்றன.

முன்பு, தி.மு.க. ஆட்சியை இதற்காகக் கடுமையாகக் குறை கூறி, ஆட்சிக்கு வந்துள்ள புதிய முதலமைச்சர், “த.வெ.க. ஆட்சி, நீட் தேர்வை எதிர்க்கிறது” என்று சொன்னால் மட்டும் போதாது; மாநில ஆட்சி – நீட் தேர்வை ரத்து செய்வதற்கு என்ன நிலைப்பாட்டை எடுக்கப் போகிறது என்பதும் முக்கியக் கேள்வியாகும்.

**ஒன்றிய அரசின் சட்டப்பூர்வமான ஒப்புதல் வாக்குமூலம்!**

கேள்வித் தாள் ‘லீக்’ ஆனால், தண்டனை என்ற சட்டமே, ‘ஊழலுக்கு அப்பாற்பட்டதல்ல நீட் தேர்வு’ என்பதை ஒன்றிய அரசே சட்டப்பூர்வமாக ஒப்புதல் வாக்குமூலத்தை உலகத்திற்கே தெரியப்படுத்தும் ஒன்றாகும்.

நீட் தேர்வின் சூழ்ச்சியைத் தொடக்கத்திலேயே புரிந்துகொண்டு தமிழ்நாடு போராடி வந்தாலும், பிற மாநிலங்கள் மிகத் தாமதமாகவே புரிந்துகொண்டன. அதனால்தான் கடந்த ஆண்டுமுதலே எதிர்ப்புகள் போராட்ட வடிவம் எடுத்தன. முழுமையான நீட் ஒழிப்பு என்ற நோக்கத்துடன்தான் இப்போராட்டம் தொடங்கியிருக்கவேண்டும். ஆனால், அதை ஓர் அமைச்சரின் பதவி விலகலோடு சுருக்கியது யார்? அவரது பதவி விலகலையே பெரிய வெற்றியாகக் காட்டி, போராட்டத்தின் நோக்கத்தைத் திசை திருப்பியது யார்? இதன் பின்னணியில் இருப்பது யார்?

தர்மேந்திர பிரதான் பதவி விலகலையடுத்து, ஓர் அசல் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்தானே கல்வி அமைச்சராகியிருக்கிறார்? ‘நீட்’ தேர்வு ஒழிப்பு என்ற கோரிக்கைக்கு இதனால் ஏதாவது பயன் உண்டா? மாணவர்களே, பெற்றோர்களே, உங்கள் கல்வி உரிமை இப்படி திசை திருப்பல்களுக்கும், மடை மாற்றத் திற்கும் ஆளாவது நியாயமா? சிந்தியுங்கள்! வெற்றி பெறும் வரை போராடுவோம் என்பதே திராவிடர் கழகத்தின் நிலை!

தொடர்ந்து அறவழியில் போராடுவோம் – வெற்றி பெறும் வரை போராடுவோம் என்பதே திராவிடர் கழகத்தின் நிலை! அதை மக்களிடம் விளக்கும் வகையில், வரும் ஜூலை 30, 31, ஆகஸ்ட் 1, 2 ஆகிய நான்கு நாள்கள், ஆறு முனைகளிலிருந்து தொடங்கி நடைபெறும் இரு சக்கரவாகனப் பரப்புரைமூலம் மாணவர்களுக்கு, இளைஞர்களுக்கு, பொதுமக்களுக்கு விளங்க வைப்போம்!

இறுதி வெற்றி நமக்கே!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



திருவண்ணாமலையில் பிரபல மருத்துவர் டாக்டர் ஸ்ரீதர் அவர்களின் தாயார் மறைந்த கோசலை அம்மாள் அவர்களின் உடலுக்கு, முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் இரா.ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், ஏ.ஏ.ஆறுமுகம், இல.மின்னல் பாபு, ஆர்.மணிகண்டன், ராயல் தியாகு உட்பட பலர் உள்ளனர்.

### த.வெ.க. ஆட்சியில் தேனி மாவட்டம் – ஆண்டிப்பட்டியில் அரசுக்கு சொந்தமான

# நிலங்கள் குறைந்த வாடகைக்கு விடப்பட்டுள்ளதால் அரசுக்கு பல லட்சம் இழப்பு!

தேனி, ஜூலை 31 - தேனி மாவட்டம்: ஆண்டிபட்டி அருகே உள்ள சக்கம்பட்டி பகுதியில், கைத்தறி நெசவாளர்களுக்குச் சொந்தமான த.வெ.க. ஆட்சியில் பல ஏக்கர் காலியிடங்கள் மிகக் குறைந்த வாடகைக்கு தனியார் அமைப்புகளுக்கும் தனிநபர்களுக்கும்விடப்பட்டுள்ளதாகச் சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாகச் சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ள புகாரில் கூறியிருப்பதாவது:

**பாரம்பரிய தொழிற்கூடம்:** சக்கம்பட்டி பகுதி பாரம்பரிய கைத்தறி நெசவுத் தொழிலுக்குப் பெயர் பெற்ற இடமாகும். நெசவாளர்களின் தொழில் வளர்ச்சி மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் நலனுக்காகப் ஒதுக்கப்பட்ட/சொந்தமான காலியிடங்கள் பல உள்ளன.

**குறைந்த வாடகை குற்றச்சாட்டு:** இந்த நிலங்களை நெசவாளர்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்கும் திட்டங்களுக்குப் பயன்படுத்தாமல், முறையான வழிகாட்டுதல்களைப் பின்பற்றாமல் மிகக் குறைந்த மாத வாடகைக்கு விடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

**வருவாய் இழப்பு:** இதன் மூலம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், அரசுக்கும் பல லட்சம் ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதுடன், நெசவாளர்களின் அடிப்படைத் தேவைகளான நூல் சேமிப்புக் கிடங்கு, உலர்த்தும் கூடம் போன்ற கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த முடியாமல் முடங்கியுள்ளது.

நெசவாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, இந்த நில குத்தகை/வாடகை ஒப்பந்தங்கள் குறித்து மாவட்ட நிர்வாகம் உடனடியாகத் தலையிட்டு உரிய ஆய்வு செய்ய வேண்டும் என்றும், தவறு நடந்துள்ள பட்சத்தில் அந்த ஒப்பந்தங்களை ரத்து செய்து நிலங்களை மீட்க வேண்டும் என்றும் அப்பகுதி மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மூனு மாச வேதனை!



**நீதிமன்ற நியமனங்களில்**
**ஊழல்**

**ஆலயச்**
**சொத்துகள்**
**சூறையாடல் என**

**மாற்றத்தை**
**மங்களகரமாய்த்**
**தொடங்கிய**
**கோட்டுமாடல்**
**அரசின்**
**நிர்வாகப்புரட்சி..**

**அமைச்சர்களின்**
**அன்றாட**

**அமெச்சூர்தனங்கள்...**

**அவ்வப்போது**
**முகம் மட்டுமே**
**காட்டிச்செல்லும்**
**கால்ஷீட் முதலமைச்சரது**
**கடமை தவறல்..**

**அரசுவிழாக்களில்**
**தலைகுனியும் தமிழ்த்தாய்**
**வாழ்த்து..**

**பட்டியலிட்டு**
**பழிவாங்க மட்டுமே**
**பயன்படுத்தப்படும்**
**காவல்துறை...**

**அரசை**
**விமர்சிப்பவர்களை**
**ஒடுக்குவதற்குப்**
**புனையப்படும்**
**வழக்குகள்..**

**வழக்கத்தில்**
**இருக்கும்**
**திட்டங்களின்மீது ஒட்டப்படும்**
**பெயர் மாற்ற**
**“ஸ்டிக்கர்கள்”..**

**சட்டம் ஒழுங்குச்**
**சீரழிவுகள்..**

**சட்டமன்ற**
**மரபுகளைச்**
**சாகடித்த**
**“சைகை”த்**
**தனங்கள்..**

**லாக்கப்**
**மரணங்கள்**

**மின் வெட்டோடு**
**கூடிய**
**மின்கட்டண**
**உயர்வுகள்..**

**மேட்டுர்அணைக்கு**
**பூட்டுப்போட்டு**
**படுகைப் பகுதியைப்**
**பாலைவனமாக்கும்**
**பாதகங்கள்..**

**மாற்றுக் கட்சி**
**எம்.எல்.ஏ.க்களை**
**விலைபேசித்**
**தூக்கும்**
**சனிக்கிழமைச்**
**சந்தையின் ராஜினாமாக்**
**காட்சிகள்..**

**அதை முதல்வரே**
**முன்னின்று**
**செய்வதாகச்**
**சொல்லும்**
**“வைகோ” சாட்சிகள்..**

**நீட்டுக்கு எதிரான**
**போராட்டத்தை**
**மெரினாவில்**
**படராமல்**
**ஒடுக்கிய**
**கடமை உணர்ச்சி..**

**அதற்காக**
**கொள்கைஎதிரி**
**பா.ஜ.க.விடம்**
**கொப்பளித்த**
**மகிழ்ச்சி..**

**“ஆஹா பேஷ்**
**பேஷ்”எனும்**
**ஆலவட்ட**
**ஷொட்டுக்கள்**

**அடுக்கடுக்கான**
**நீதிமன்றக்**
**குட்டுக்கள்..**

**ஆக**
**மொத்தத்தில்**

**ரீல்ஸ்களோடும்**
**மீம்ஸ்களோடும்**

**ஜனநாயகத்தை**
**மதிக்காத**
**குஜிலிமஸ்து**
**கூட்டம்**

**“கடைசிக்காட்சி”**
**என்று**
**ஓடாத**
**ஜனநாயகன்**
**ஓடும்**
**தியேட்டர்களில் ஒக்காந்து**
**அழுதுவழிய..**

**இந்த ஆட்சியின்**
**கடைசி நாள்**
**காட்சி**
**எப்போது**
**வரும் என**

**அறியாது**
**செய்த**
**அரசியல்**
**பிழைக்காக**


**ஆங்காங்கே**
**மக்கள்**
**ஆவேசத்தில்**
**எரிமலையாய்க்**
**குமுறி எரிய ..**

**நம்ம..**
**பட்டிமன்ற**
**மந்திரி**
**பாணியில்**
**சொன்னால்**

**“மூச்சுமுட்ட**
**பேச்சு**
**மூனுமாசம்**
**போச்சு” என**
**விரல் விட்டு**
**எண்ணுகிறது**

**வேதனையில்**
**தமிழ்நாடு...**

**என்னநாஞ்**
**சொல்றது**



**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்*

### வேலூரில்

# விமானச் சேவைகளைத் தொடங்க விரைந்து நடவடிக்கை எடுப்பீர்!

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் வலியுறுத்தல்!

*புதுடெல்லி, ஜூலை 31 - பிராந்திய இணைப்புத் (RC-SUDAN) திட்டத்தின் கீழ் வேலூர் விமான நிலையத்தை விரைவில் வணிக ரீதியான பயணியர் செயல்பாட்டிற்குக் கொண்டுவருதல் குறித்து நாடாளுமன்ற மக்களவையில் விதி எண். 377 கீழ் வேலூர் தொகுதி எம்.பி. டி.எம்.கதிர் ஆனந்த் கோரிக்கை விடுத்தார்.*

*இது குறித்து அவர் வலியுறுத்தியதாவது:*

*தமிழ்நாட்டில் உள்ள வேலூர் விமான நிலையத்தை ‘RC-SUDAN’ பிராந்திய இணைப்புத் திட்டத்தின் கீழ் வணிக ரீதியாகத் திறந்து பயணியர் செயல்பாட்டிற்குக் கொண்டுவருவதில் ஏற்பட்டுள்ள நீண்ட காலத் தாமதம் குறித்து அரசின் கவனத்தை ஈர்க்க விரும்பு கிறேன்.*



*இவ்விமான நிலையத் திற்கான மேம்பாட்டுப் பணிகள் நிறைவடைந்து விட்டன. இந்திய விமான நிலையங்கள் ஆணையம் (AAI), விமான நிலைய உரிமத்தைப் (Aerodrome Licence) பெறுவதற்கான விண்ணப்பத்தை 27 மார்ச் 2023 அன்று சமர்ப்பித்தது. சிவில் விமானப் போக்குவரத்து இயக்குனரகம் (DGCA) 26-28 பிப்ரவரி 2024 மற்றும் மீண்டும் 11 டிசம்பர் 2025 ஆகிய தேதிகளில் ஆய்வுகளை மேற்கொண்டது.*

*இருப்பினும், விமான நிலைய உரிமம் வழங்குவதற்கு அவசியமான, சிவில் விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பணியகத்தின் (BCAS) இறுதிப் பாதுகாப்புச் சரிபார்ப்புப் பணி இன்னும் நிலுவையில் உள்ளது.*

*சென்னை, பெங்களூரு மற்றும் பிற நகரங்களுக்கு விமானப் போக்குவரத்து வசதி தேவைப்படும் வேலூர் பகுதியிலுள்ள மாணவர்கள், நோயாளிகள், தொழில் நிறுவ னங்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு இத்தாமதம் பெரும் சிரமத்தை ஏற்படுத்துகிறது.*

*எனவே, பாதுகாப்புச் சரிபார்ப்புப் பணியை முன்னுரிமை அடிப்படையில் நிறைவு செய்யவும், மேலும் தாமதமின்றி விமான நிலைய உரிமத்தை வழங்கவும், வேலூர் விமான நிலை யத்திலிருந்து வணிக ரீதியான பயணியர் விமானச் சேவைகளை விரைவில் தொடங்கவும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் BCASக்கு உத்தரவிட வேண்டும் என்று ஒன்றிய அரசிடம் வலியுறுத்துகிறேன்.*

*இவ்வாறு டி.எம்.கதிர் ஆனந்த் கோரிக்கை வைத்தார்.*

# வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. அறிவிப்பு!

*வேலூர், ஜூலை 31 - வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க அவசர செயற்குழுக் கூட்டம் நாளை (01.08.2026 சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன் தலைமையில் காட்பாடி எஸ்.ஏ.மஹால், ஆக்ஸிலியம் கல்லூரி, ரவுண்டானா அருகில் நடைபெறவுள்ளது என்று மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் தெரிவித்துள்ளார்.*

*இக்கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள பொருள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.*

*எனவே, வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க விற்குட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொகுதி பொறுப்பாளர்கள், மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.*

*பொருள்:*

*கழக ஆக்கப்பணிகள்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*